**செலசினே ரூபவாஹினி நிறுவனம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

செலசினே ரூபவாஹினி நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து, நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்ற வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிட செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் சுய வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்.

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை டிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீ செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடன் தொடர்பான இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதியில் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட எனினும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் ரூபா 27,557,656 கிரயமான ஆதனம், பொறி | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம், எதிர்வரும் | சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பாக மதிப்பீட்டு ரீதியான காலத்தை |

| | | |
|---|---|---|
| மற்றும் உபகரணங்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்காததுடன் இச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீட்டு ரீதியான காலத்தை இ.பொ.க.நி. 3 பிரகாரம் மீண்டும் செம்மையாக்கி நிதிக்கூற்றுக்களில் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க உரிய அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. | நியமம் பிரகாரம் மீண்டும் செம்மையாக்கி நிதிக்கூற்றுக்களில் காட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் | 300,440,528 | 279,538,783 | 20,901,745 | தொடர்புடைய அட்டவணைகளை சமர்ப்பிக்கிறேன். | நிதிக்கூற்றுக்களிலான மீதிகளுக்குரிய விரிவான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் | 234,628,323 | 184,491,960 | 50,136,397 | அட்டவணைகளை சமர்ப்பிக்கிறேன். | நிதிக்கூற்றுக்களிலான மீதிகளுக்குரிய விரிவான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| செலுத்த வேண்டிய கட்டிட வாடகை (தேசிய திரைப்பட கூட:டுத்தாபனம்) | 900,000 | 4,106,000 | 3,206,000 | விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்புடைய செலுத்த வேண்டிய வாடகையை உறுதி செய்து காட்ட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை | இணக்கஞ் செய்யப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| வியாபார கடன்படுனர் | 288,956,004 | மீதி உறுதிப்படுத்தல் | மீதி உறுதிப்படுத்தல்க | கணக்குகளில் காட்டப்படும் |

| | | |
|---|---|---|
| மீதிகள் | ள் சமர்ப்பிக்கப்பட்டுள் ளன. | பெறுமதிகளிற்கு உரியதான மீதி உறுதிப்படுத்தல்களை சமர்ப்பிக்க வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் | | | |
| | (i) நிதிப்பிரமாணம் 134 | மீளாய்வாண்டிற்குரிய உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டமொன்றை தயாரித்திருக்காததுடன் உள்ளக கணக்காய்வு அறிக்கையையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டமொன்றை தயாரிக்க வேண்டுமெனவும் மற்றும் உள்ளக கணக்காய்வு அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) நிதிப்பிரமாணம் 757 | கணக்காண்டு இறுதியில் பண்டக கணிப்பீட்டை மேற்கொண்டு அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பண்டக கணிப்பீட்டு அறிக்கையை உரியவாறு சமர்ப்பிக்க வேண்டும். |
| | (iii) நிதிப்பிரமாணம் 371(2) (ஆ) மற்றும் 2020 ஆகஸ்ட் 28 இன் PFD/RED/01/01/ 2020/01 இலக்க அரச நிதி சுற்றறிக்கை | ஏதேனும் விஷேட செயற்பாட்டிற்காக வழங்கப்படும் நிமித்த கட்டுநிதி ஒரு சந்தர்பத்தில் 100,000 இனை விஞ்சக் கூடாத போதும் எல்லையை விஞ்சுவதை தவிர்க்க ஒரு குறித்த செயற்பாட்டின் பல பகுதிகளிற்காக வெவ்வேறாக முற்பணம் | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | எல்லையினுள் முற்பணம் வழங்கி தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கப்பட்டிருந்தது. | | |
| | | மேலும், பெற்றுக் கொண்ட முற்பணத்தை குறித்த செயற்பாடு முடிவடைந்தவுடனே தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் 2013 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளில் அலுவலரிற்கு வழங்கியிருந்த கூட்டுத் தொகை ரூபா 312,400 ஆன முற்பணத்தையும் 2020 நவம்பர் 16 வழங்கியிருந்த ரூபா 53,620 ஆன முற்பணத்தையும் இவ்வறிக்கை திகதியன்றும் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | குறித்த செயற்பாடு முடிவடைந்தவுடனே முற்பணத் தொகையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2003 ஜுன் 02 இன் பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.1 பிரிவு | ஒவ்வொரு ஆண்டிற்கும் உரிய வருமான மிகையை திறைசேரிக்கு அனுப்ப வேண்டிய போதும், மீளாய்வாண்டிற்குரிய ரூபா 240,437,840 ஆன வருமானம் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | மேலதிக வருமானத்தை திறைசேரிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 2(1)(அ) பிரிவு பிரகாரம் ஏதேனும் மதிப்பீட்டு ஆண்டொன்றிற்காக வரி அறவிட முடியுமான வருமானமொன்றை நபரொருவரினால் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டிற்கும் வரி செலுத்த வேண்டிய போதும் 1982 பெப்ரவரி 01 திகதி ஆரம்பித்திருந்த செலசினே ரூபவாஹினி நிறுவனத்தால் இவ்வறிக்கை திகதிவரை வருமான வரி செலுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | வருமான வரி செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 29,339,593 நட்டமொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 8,300,209 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 37,639,802 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வீழ்ச்சிக்கு வருமானம் குறைவடைந்தமை பிரதான காரணமாக காணப்பட்டது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நேரடி வருமானம் 63 சதவீதத்தாலும் ஏனைய வருமானங்கள் 15 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்ததுடன் மொத்த வருமானத்தின் குறைவடைவு 62 சதவீதமானது. அவ்வாறே நேரடி செலவு 64 சதவீதத்தாலும் ஏனைய செலவுகள் 19 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்ததுடன் மொத்த செலவின குறைவடைவு 57 சதவீதமானது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் நடைமுறை விகிதம் 3.5 சதவீதத்தால் குறைவடைத்திருந்ததுடன் தேறிய இலாப விகிதம் 453 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செலசினே ரூபவாஹினி நிறுவனம், 2020 ஒக்டோபர் 19 இன் அமப/20/1572/316/009 இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தனியார் கம்பனியொன்றாக பதிவு செய்ய தீர்மானித்திருந்த போதும் அந்நடவடிக்கைகளும், அதற்கு தொடர்புடைய செயலாளர் ஒருவரை நியமிக்கும் நடவடிக்கையும் இவ்வறிக்கை திகதியளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | செயலாளர் ஒருவரை நியமிக்கும் மற்றும் கம்பனியொன்றாக பதிவு செய்யும் நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்ய வேண்டும். |
| (ஆ) | 2016 முதல் 2020 ஆண்டு வரை நிறுவனத்திற்கு சமர்ப்பித்திருந்த 09 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு கணக்காய்வு திகதிய இவ்வறிக்கை திகதி வரை பதில் வழங்கியிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | கணக்காய்வு ஐயவினாக்களுக்கு விரைவில் பதில் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2016 ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவி வரும் ரூபா 11,988,000 நிதி மோசடிக்குரிய நட்டத்தை அறவிட இவ்வறிக்கை திகதியளவிலும் செயற்பாடுகளை எடுத்திருக்கவில்லை. | 2016 ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவி வரும் ரூபா 11,988,000 ஆன நிதி மோசடிக்குரிய சட்ட நடவடிக்கையாக உயர் நீதிமன்றத்தில் தற்போது வழக்கொன்று விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. | மோசடிக்குரிய நட்டத்தை அறவிட விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2010 ஆகஸ்ட் 12 இன் 10/1682/407/014 இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களின் அறவித்தல் மற்றும் விளம்பர நடவடிக்கைகளை செலசினே ரூபவாஹினி நிறுவனத்தினூடாக செய்து கொள்ளும் அதிகாரம் கிடைத்து 10 ஆண்டுகள் கடந்திருந்த போதும் அதற்கு தேவையான மனிதவள மற்றும் பௌதீக வள தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முகாமைத்துவம் போதிய கவனம் செலுத்தியிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 9.8 பிரகாரம், பெறுகைகள் குழுவின் இணக்கத்துடன் இலத்திரனியல் ஊடகத்தின் மூலம் பெறுகைகள் நடைமுறையை செயற்படுத்த முடியுமான போதும் குறித்த இணக்கமின்றி இலத்திரனியல் பெறுகைகளை செயற்படுத்தி இருந்ததுடன் வழங்குனர்களிடமிருந்து மிக குறைந்த பதில்களே கிடைத்திருந்ததால் போட்டியின்றி வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 திகதியன்று நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 70 ஆனதுடன் அவற்றில் 31 பேர்கள் நிரந்தர ஊழியர்களும் 39 பேர்கள் ஒப்பந்த அடிப்படையில் | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | ஆளணியை அங்கீகார பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களுமாவர். அத்திகதியில் உள்ளவாறான ஆளணி 54 ஆனதுடன் அவற்றில் 14 பேர்கள் நிரந்தர ஊழியர்களும், ஏனைய 40 பேர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டவர்களுமாவர். இதன் பிரகாரம் நிரந்தர பதவிகளில் 17 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஒப்ந்த அடிப்படையில் ஆட்சேர்த்த ஓர் உத்தியோகத்தர் மேலதிக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | | |
| (ஆ) 2014 ஒக்டோபர் 15 திகதிய இலக்கம் DMS/1595 கொண்ட முகாமைத்துவ நிணைக்களத்தால் வெளியிடப்பட்ட கடிதம் மூலம், ஒப்பந்த அடிப்படையில் 18 பதவிகளை அங்கீகரித்து அதற்குரிய ஆடசேர்ப்பு திட்டத்தை தயாரித்து முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதும் முகாமையாளர் (நிதி) பதவி தவிர ஏனைய பதவிகளிற்குரிய ஆட்சேர்ப்பு திட்டத்தை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | ஆட்சேர்ப்பு திட்டத்தை அங்கீகரித்துக் கொண்டு அதன் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 பிரிவின் பிரகாரம், நிறுவனத்தின் மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த வரைபு அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள், கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களுக்குள் வரிசை அமைச்சிற்கு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு பிரதிகளுடன் கணக்கய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 100 நாட்கள் தாமதமாகி 2022 ஜுன் 09 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | வருடாந்த வரைபு அறிக்கை கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களுக்குள் குறித்த நிறுவனத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.2 வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பிரிவின் பிரகாரம் 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் வருடாந்த அறிக்கைகள் இவ்வறிக்கையின் திகதியன்றும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | வருடாந்த அறிக்கையை தாமதமின்றி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.3 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 பிரிவின் பிரகாரம், கம்பனியின் தூரநோக்கு மற்றும் செயற்பணி நிறைவேற்ற மூன்றாண்டுகளிற்கு குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டமொன்று மற்றும் அதற்கு நேரொத்த செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரிக்க வேண்டிய போதும் மீளாய்வாண்டிற்குரியதாக கூட்டிணைந்த திட்டமொன்றை தயாரிக்காது செயல் நடவடிக்கை திட்டமொன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.. |

**4.4 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நிகழ்சி முகாமைத்துவம், கிரபிக் மற்றும் அச்சிடல் வருமான ஈட்டல், உற்பத்தி வருமான ஈட்டல் மற்றும் அட்டவணைபடுத்திய வருமான ஈட்டல் ஆகிய செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பான பௌதீக செயலாற்றுகை 15 சதவீதம் முதல் 59 சதவீதமாகவும் நிதி செயலாற்றுகை 10 சதவீதம் முதல் 41 சதவீதம் வரை குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் செயலாற்றலை பெற்றுக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | புதிய கொள்வனவாளர்களை தேடிக்கொள்ளும் இலக்கு 80 கொள்வனவாளர்களான போதும் 2020 ஆண்டினுள் 16 கொள்வனவாளர்கள் அதாவது 20% ஆன இலக்கு மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | திட்டத்தின் பிரகாரம் இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டும். |

**4.5 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ‘‘நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு நிகழ்சி நிரல்’’ பிரகாரம் ஒவ்வொறு அரச நிறுவனமும் செயற்பட வேண்டியுள்ளதுடன் மீளாய்வாண்டிற்குரியதாக நிறுவனத்தினால் தனது விடயபரப்பிற்கு உட்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென அறிந்திருக்காத காரணத்தால் அதன் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கு மற்றும் அதன் இலக்குகளை அடைந்து கொள்வதனை அளவிடுவதற்கான சுட்டிகளையும் இனங்கண்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |